IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUPORUR.
OS No. 234/2023

| | | |
|---|---|---|
| Name | :Kanchana | P.W.1 |
| Father/Husband Name | :Umapathy | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : 19-03-2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.03.2025.

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.**

1. நான் வழக்கு சொத்தில் என்ன விவசாயம் செய்து வருகிறேன் என்றால் விரபாடி (நெல்) விவசாயம் செய்து வருகிறேன். மழை பெய்தால் தான் விவசாயம் செய்யப்படும். கிணற்று பாசனத்தில் விவசாயம் செய்யப்படவில்லை. எத்தனை நாட்களாக விவசாயம் செய்து வருகிறேன் என்றால் என் தந்தை உள்ள வரை தான் விவசாயம் செய்தேன். அதன் பின்னர் எனக்கு உடல்நிலை சரியில்லாதல் செய்யவில்லை. நான் நேரடியாக விவசாயம் செய்யவில்லை, என் தந்தை தான் பார்த்து கொள்வார். என் தந்தை வழக்கு சொத்தை யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. நான் வழக்கு விவரங்கள் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் வில்லங்க சான்றிதழ் பெற்ற பிறகு தான் தெரிந்து கொண்டேன். என் தந்தையார் யாரிடம் இருந்து வழக்கு சொத்தை வாங்கி எனக்கு கொடுத்தார் என்ற விவரக்ஙளை நான் எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்றால் எனது அண்ணன் தம்பி மூலமாக தெரிந்து கொண்டேன்.

2. பிரதிவாதிகளுக்கு எதிராக நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் அவர்கள் வழக்கு சொத்தில் பிரச்சனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதிகள் பெயரில் ஆவணங்கள் உள்ள விவரம் தற்போது தான் தெரிந்து கொண்டேன் எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் என் தந்தை இறந்த பிறகு தான் தெரிந்து கொண்டேன். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 12 வருடங்கள் ஆகிறது. வழக்கு தாக்கல் செய்த பிற்கு நான் பிரதிவாதிகள் தாக்கல் செய்த ஆவணங்களை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. பிரதிவாதிகளிடம் பாட்டி கங்கம்மாள் சின்னகண்ணன் குமரன் சின்னப்பையன் என்பவரிடம் இருந்து 1960 ஆம் வருடம் வழக்கு சொத்தை வாங்கிய விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் என் பெயரில் 143

ஆம் நெம்பர் பட்டா தாக்கி என்று குறிப்பிட்ட விவரம் எனக்கு தெரியாது. சின்னப்பையன் பெயரில் உள்ள அசல் பட்டாவை தாக்கல் செய்யயப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. 1960 கால கட்டத்தில் கங்கம்மாள் சின்னப்பையன் என்பவரிடம் இருந்து வாங்கியதாக அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது. கங்கம்மாள் சின்னப்பையன் என்பவரிடம் இருந்து வாங்கிய காலகட்டத்தில் இருந்து அவர் தான் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றும் அந்த சமயத்தில் சின்னப்பையன் வழக்கு சொத்தில் சவுக்கு மரம் விளைவித்து வந்தாக அடங்கலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த சவுக்கு மரம் உடன் தான் சின்னப்பையன் என்பவரிடம் இருந்த கங்கம்மாள் வாங்கியதாக ஆவணத்தில் உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

3. நான் தாக்கல் செய்துள்ள வ.,சா.ஆ. 1 ஆவணத்தின் படி தம்பிரான் மகன் சின்னப்பன் என்பவர் வழக்கு சொத்திறகு சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. அதன் மூலமாக நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. கங்கம்மாள் வாங்கிய பிறகு கங்கம்மாள் பெயரில் பட்டா வந்துள்ளது என்றால் எனக்கு தெரியாது. கங்கம்மாள் என்பவரிடம் இருந்து பிரதிவாதிகளின் தந்தை செல்லப்ப நாயக்கர் 1980 வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. அதன் அடிப்படையில் செல்லப்ப நாயக்கர் பெயரில்பட்டா எண். 164 பதிவாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது. இத்தனை ஆவணங்கள் இருக்கும் சமயத்தில் என் தந்தையார் எந்த விதமான ஆதரமின்றி வழக்கு சொத்தை வாங்கினார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கான ஆபதிவேட்டிலும் பிரதிவாதிகளின் தந்தை பெயர் செல்லப்ப நாயக்கர் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வ.சா.ஆ. 15 அறிவிப்பிலும் ஆண்டி என்ற தம்பிரான் மகன் சின்னப்பயைன் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அடங்கலில் ஆ. சின்னப்பையன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் நாங்களாகவே ஆண்டி மகன் சின்னப்பைன் என்று நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல. இந்த காரணத்தினால் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் என் தந்தையின் இறுதி சடங்கிற்கு வந்தார்கள். பிரதிவாதிகளும் என் தந்தையும் ஒரே ஊரியில் தான் வந்தார்கள் என்றால் இல்லை.

4. நான் சொத்து வாங்குவதற்கு முன்னரே 1960 ஆம் வருடத்தில் இருந்து பிரதிவாதிகள் பெயரில் சொத்து உள்ளதால் அந்த ஆவணத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்க இயலாது என்று சசொன்னால் சரியல்ல. நான் கோரிய பரிகாரம் கால வரையறை சட்டத்தினால் பாதிகப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காகவே வ.சா.ஆ. 11 மற்றும் 12 ஆவணம் என்னாலும் என்னுடைய சகோதராலும் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்திடல் நான் எப்போதும் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு கேட்டு கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

S/d- N.Anupriya, 19.03.2025
Taken down by me in open court read over in
the witness and admitted by the witness to be correct
DM cum JM/TPR.